தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] திபி.2017 நளி (2-11-1986) 65 காசுகள் [இதழ் எண்: 76] [பகுதி 27-30

தமிழீழப் போராளிகளின் மேல் தமிழக அரசு நடவடிக்கை கொடுமையும் அவமானமும் கொண்டதாகும்!

அந்நிலை, இலங்கைக் கொடுமையாளர்களுக்குத் துணை போவதாகும்!

இதனால் தமிழின முன்னேற்றத்திற்கே ஊறுபாடுகள் நேரும்!

தில்லி முடிவுகளுக்குத் தமிழக அரசு துணைபோகக் கூடாது!

பாலத்தீனம், தென்னாப்பிரிக்கா- விடுதலை முயற்சிகளை ஆதரிக்கும் இந்திய அரசு, தமிழீழப் போராளிகளிடம் ஏன் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும்!

பாவலரேறு கண்டன அறிக்கை !

கடந்த கிழமை தமிழக அரசு தமிழீழப் போராளிகள் ஆயிரக்கணக்கான பேர்களைத் திடுமென, யாரும் சற்றும் எதிர்பார்க்காத முறையில் தளைப்படுத்தியதும் இயக்கத் தலைவர்களையும் அவமானப் படுத்தும் வகையிலும், இலங்கைக் கயவர்கள மகிழ்ச்சியும் ஊக்கமும் பெறும் வகையிலும், அவர்களைக் கடுமையான வகையில் காவல்துறை ஆய்வுகளுக்கு உட்படுத்தியும், கடுமையான கொலைக்குற்றவாளிகள், கொள்ளைக்காரர்கள்போல் அவர்களைப் பல கோணங்களில் படங்கள் பிடித்தும், உசாவல் செய்தும், வீட்டுக் காவலில் வைத்தும் இழிவுபடுத்தியதும் மிகமிக வன்மையாகக் கண்டிக்கத் தக்க செயல்களாகும்.

உலக வரலாற்றிலேயே தமிழினத்திற்கு இப்படியோர் தலைக்குனிவும் தாழ்ச்சியும் இதுவரை ஏற்பட்டதில்லை. இந்நிகழ்ச்சி தமிழின முன்னேற்றத்திற்கான அனைத்து முயற்சிகளையும் பின்னடையச் செய்ததுடன் தமிழின முன்னேற்றத்திற்குப் பாடுபடும் போராளர்களையும், அரசியல் தலைவர்களையும் வலுத்த மனச்சோர்வுக்கும், அச்சத்திற்கும் உள்ளாக்கி விட்டது. தமிழக அரசும், முதலமைச்சரும் இந்நடவடிக்கைகளின் வழி, தமிழக வரலாற்றில் தீராத ஒரு பழியைத் தேடிக் கொண்டனர்.

இன்றைய தமிழக அரசு எப்பொழுதுமே, வடநாட்டுத் தில்லிப் பார்ப்பனிய முதலாளிய வல்லதிகார ஆட்சிக்குத் துணைபோவதாகவே அன்றும் இன்றும் நடந்து கொண்டு வருகிறது.

தமிழர்களுக்கு மாறான இந்தித் திணிப்பில் அதன் அமைச்சர்கள் ஓரிருவரைத் தவிர, தலைமை அமைச்சரும் அமைச்சர்கள் பிறரும் இரட்டைப்புனைவு போட்டுக் கொண்ட அரசியல் நாடக நடிகர்களாகவே நடந்து கொள்கின்றனர். புதுக்கல்விக் கொள்கையில் தில்லிக்குத் தலையும், தமிழக மக்களுக்கு வாலையும் காட்டுகின்ற விலாங்குபோலவே செயல்படுகின்றனர். இவை தவிர, பிற தமிழின முன்னேற்ற முயற்சிகள் அனைத்திலுமே என்றுமே அவர்கள் நேர்மையாகவோ உண்மையாகவோ, அல்லது வெளிப்படையாகவோ நடந்து கொண்டது இல்லை.

மக்களை ஏமாற்றுவதற்கு ஏதோ தமிழ் மொழிக்கென்றும் தமிழக மக்களுக்கென்றும் இங்கொன்றும் அங்கொன்றும் சில நடவடிக்கைகளை எடுப்பதும், செயல் திட்டங்களை அறிவிப்பதும், பெரியார், அண்ணா என்று பலபடப் பேசி அவர்களுடைய கொள்கைகளுக்கு நேர்மாறாக நடந்து கொள்வதுமே அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

அரசியலில் அவர்களுக்கு வரும் கொள்ளை ஊதியங்களை வைத்துக் கொண்டு, தமிழும் தமிழினமும் தமிழ் நாடும் எக்கேடு கெட்டால் என்ன என்று கருதியபடி, ஏனோதானோ போக்கிலேயே அவர்கள் இதுவரை ஆட்சி நடத்தி வந்திருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழீழப் போராட்டத்தையே தலைகுப்புறக் கவிழ்க்கும் வகையில் அவர்கள் இக்கால் எடுத்துக் கொண்ட கடுமையான காவல்துறை நடவடிக்கைகள், அவர்களின் உள் நோக்கங்களையே பளிச்செனக் காட்டி விட்டது. அவர்களிடம் இனியும் தமிழக மக்கள் நம்பிக்கை காட்டிப் பயனில்லை என்றாகி விட்டது.

ஆனாலும் போராளிகள் மனந்தளர வேண்டியதில்லை. விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுவும் நடக்கும்; இதை விடவும் நடக்கும். எந்த நடவடிக்கைகளும் புறத்தாக்குதல்களும் அவர்கள் எடுத்துக் கொண்ட விடுதலை நோக்கத்திற்கும் தூய்மையான தந்நலமற்ற போராட்டத்திற்கும் முன்னர் கால்தூசுகளைப் போன்றவையே!

எனவே போராளிகள் தாம் கொண்ட உறுதிப்பாட்டிலும், கொள்கை நோக்கிலும் சிறிதும் மாற்றமடையத் தேவையில்லை. மேன்மேலும் அவர்கள் யானை போன்ற வலிவும், அரிமா போன்ற சீற்றமும் கொண்டு செயல் பட்டே ஆக வேண்டும். அவ்வாறு அவர்கள் போராடுவார்கள் என்னும் நம்பிக்கையும் நமக்குண்டு.

கடந்த மூவாயிரமாண்டுக் காலத் தமிழினத்தின் தாழ்ச்சி வரலாறு, இவர்களின் இடைவிடாத, தொய்வு போகாத போராட்ட முன்னேற்ற முயற்சிகளால் முறியடிக்கப் பட வேண்டும்; பட்டே ஆக வேண்டும் என்பதே நம் கோட்பாடும், கோரிக்கையும், வேணவாவும் ஆகும். அதற்கென நாம் என்றும்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

உங்கள் மடல்கள்

1. புதுச்சேரியில் புதிய கல்வி !

ஐயா, வணக்கம். இந்திய வெறிபிடித்த அரசின், ''புதிய கல்விக் கொள்கை'' என்னும் பெயரில், இந்தி பேசாத மாநில மக்களின் மீது இந்தி மொழியைத் திணிப்பதற்காக, ''மாதிரிப் பள்ளிகள்'' ஏற்படுத்தும் முயற்சியைத் தடை செய்வதற்காகப் புதுச் சேரியைச் சார்ந்துள்ள முத்தரையர் பாளையம் என்கின்ற ஊரில் இருக்கும் இளங்கோ அடிகள் மேல்நிலைப்பள்ளி (அரசு)யில் படிக்கும் மாணவர்களாகிய நாங்கள் கடந்த ஒரு கிழமையாகத் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தோம்.

ஆனல் புதுச்சேரியில் ஆட்சி நடத்தும், பேராயக் கட்சியினர் மாணவர்களின் அறப்போராட்டத்தை மதிக்காமலும், பொருட் படுத்தாமலும் இருந்ததனல் 21.8.86 ஆம் நாள் நாங்கள், மாதிரிப் பள்ளிகளால் தமிழ் நாட்டு, புதுச்சேரி வாழ் மாணவர் களுக்கும் தமிழினத்திற்கும் ஏற்படவிருக்கிற இழப்புகளையும், இந்நாட்டின் கடந்த 39 ஆண்டுகளில் வளர்ச்சியடைந்துள்ள (!) கல்வி நிலையையும் துண்டறிக்கைகளாக அச்சிட்டுப் புதுச்சேரியி லுள்ள பெரும்பாலான பள்ளி மாணவர்களின் ஒத்துழைப்புடன் புதுவைப் பகுதியில் ''மாதிரிப்பள்ளி'' அமையவிருக்கும் இடமான ''கதிர்காமம்'' என்ற ஊரில் அப்பள்ளியில் சேருவதான வேண்டு கோள் படிவங்களைத் தீயிட்டுக் கொளுத்தி எங்கள் போராட் டத்தை வலுப்படுத்தியுள்ளோம்.

பின்னர் ஊர்வலமாகச், சென்று சட்டப்பேரவையிலிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களையும், உறுப்பினர்களையும் சந்தித்துத் துண்டறிக்கைகள் கொடுத்து நடவடிக்கை எடுக்கும்படிக் கூறினேம். நன்றி,

இவண்
இளங்கோ அடிகள் அரசு மேல்நிலைப் பள்ளி
மாணவ, மாணவியர்.

2. அன்பரசன் மறைவு உயிரைப் பிடித்து உலுக்கியது!

ஐயா, அவர்களுக்கு வணக்கம். ''தமிழ்நிலத்தில்'' அன்பரசன் செய்தி கண்ணுற்றபோது ஆருத்துயருற்றேன்.

முதல் இதழில் 'அன்பரசன்' எனப்பார்த்தபோது அச்செய்தி அவ்வளவு துக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஆனல், ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன், ''தெரிவித்தால் கடலை நீந்திக் கடந்து தமிழகம் வருவேன்'' எனத் தென்மொழிக்கு மடல் விடுத்தவர் இவரே என்பதை இப்போது அறிய வந்தபோதுதான், அவர் மறைவு உயிரைப் பிடித்து உலுக்கியது.

அன்று அவர் எழுதிய மடல் எத்தனை ஆயிரம் தமிழ் இளைஞர் களை உணர்ச்சிப் பிழம்பாக்கியது என்பதை அவர் உணர்ந்திருக்க மாட்டார். ஆனல், அந்தமடல் சொற்கள் எரிகொள்ளி போல் நெருப்பை உமிழ்ந்து கொண்டு எம் நெஞ்சங்களில் வந்து வீழ்ந்ததை இன்று நினைவுகூறுகிறேன்.

அவர் தம் குழந்தைகளின் கதறலைப் படித்த போது நானும் கதறியழுதுவிட்டேன்.

ஈரோட்டின் மருத்துவ மேதை இளங்கோ மறைவும், மலையகத்தின் அன்பரசன் மறைவும் நெஞ்சைப்பிசைகின்றன.

-இரணியன் கோவை 18

மீள்வதென்றே?

-கடவூர் மணிமாறன், க. மு.

வெற்றியினை ஈட்டவல்ல இளையோர் கூட்டம்
வெறிமிகவே பாலுணர்வில் மயங்கி நிற்கக்
கற்றறிந்த பெருமக்கள் எல்லாம் தங்கள்
கடப்பாட்டை மறந்தோராய்ச் செல்வம் சேர்க்கும்
பெற்றியிலே உழல்கின்ற பின்னும் இங்கே
பெருமைக்கும் இடமுண்டோ? தொன்று தொட்டே
வற்ருத ஆறுபல பாய்ந்தும் நாட்டில்
வறுமையிலே நெளிகின்ற அவலம் ஏனே?

பொறுப்பில்லா மாந்தர்களால் குமுகா யத்தில்
புலராது புதுவாழ்வின் விடியல்; நீங்கா
வெறுப்புதனை, பகைமையினை வளர்ப்ப தோடு
விலக்கிவிட்டார் முயற்சயினை உழைப்பை என்ருல்
மறுப்புரைக்க யார்வருவார்? எவரு மிங்கே
மக்கள்நலம் பேணுவதற்(கு) அணிய மில்லை!
உருப்படியாய் எச்செயலும் இயங்க வில்லை
உயர்வேது? புகழேது? நமது வாழ்வில் !

தலைவருக்கோ குறைவில்லை; தமிழர் நாட்டில்
தன்மானம் பறிபோகும் நிலையில் கூட
அலைகின்ருர் சுருட்டுகின்ற வழிகள் தம்மை
ஆராய்ந்து காண்கின்ருர்! பரத்தை யர் போல்
விலையாகும் கலையினிலே தேர்ந்தார் அந்நாள்
வீரத்தைக் காலடியில் விற்ருர்! வீணே
குலைநடுங்கிச் சாகின்ற போக்கினலே
கொத்தடிமை ஆகியநாம் மீள்வ தென்ருே?

பிறருயர்வைப் பொறுக்காத அழுக்கா ருமை
பெரியோரை நாடாமை; கூடா நட்பு!
அறச் செயல்கள் விழையாமை! அடக்கம் அன்பை
அணுவளவும் வெஃகாமை! அறிவில் லாமை
புறங்கூறும் பேதைமை! கீழ்க் கயமை! வேண்டும்
பொறையின்மை! பண்பின்மை! புகழை நாடும்
திறமின்மை; நடுநிலைமை இன்மை போன்ற
தீயவையின் வயப்பட்டே வீழ்ச்சி யுற்ருேம்!

மறுப்பு மடல்கள் !

யார் பிழைப்பு'வாதி'? ம.க.இ.க.வா? "புதிய கலாச்சாரமா"?

போலிப் (பெயர்ப்பலகை) பொதுவுடைமை நடத்தி வரும் இதழான (அக்டோபர் 86) 'புதிய கலாச்சாரம்' ஒன்று திருவள்ளுவரையும்- பாவலரேறு பெருஞ்சித்திரனுரையும் சாதிவெறி பிடித்தவர்கள் எனக் கட்டங்கட்டித் தனதுபோலிமையை வெளிப்படுத்தியதற்கு நாம் நன்றி செலுத்தத்தான் வேண்டும்!

திருவள்ளுவர் யார்? பெருஞ்சித்திரனுர் யார்? குறளைத் தெளியாமை- வாழ்க்கை நடைமுறை அறியாமை கொண்டு அப் பச்சோந்திகள் சேற்றை வாரிப் பூசுவதிலும் நமக்கு வியப்பொன்றுமில்லைதான்!

'பறையும் கயமையும்' எனும் தலைப்பில் கட்டுரை வந்ததில் இவர்களுக்கென்ன நோக்காடு? குறளே உமக்குமருளாயுளதே?

'பறை' எனும் ஒலிக்கருவியை 'கயமை'- எனும் தன்மைக்குத்தான் உவமானப் படுத்தி வள்ளுவர் கூறியுள்ளார். பறையை ஒலிக்கக் கூடிய குலத்தினையா குறிப்பிட்டார்?

...ம.க.இ.க. மட்டும்தான் பறையைப் பயன்படுதுத்கிறதோ? வேறுபிறர்அதனைப் பயன் படுத்துவதில்லையோ? தென்மொழி பயன்படுத்தவில்லையா?

பறை, முழவு, கொம்பு, தண்ணுமை, சங்கு, பம்பை, உறும்பை இன்னும் பல இசைக் கருவிகள் நம் பண்டைத் தமிழராலேயே, ஏன்? இன்னும் சொல்லப் போனல் அவ்விதழ் சொல்லாமல் சுட்டுகிற அனைத்து இனத்தினரும் பயன்படுத்திய ஒன்றுதானே? மற்ற இசைக் கருவிக்கும் பறைக்கும் ஒலி வேறுபாடு குறித்துத்தான் மாந்தனுக்கும்- கயவனுக்கும் ஒப்புமை காட்டினுரே ஒழிய, வேறென்ன?

'சேற்றில் பூத்த செந்தாமரை' என்ருல் சேறு தேவையில்லாத ஒன்ரு? அறிவுக்கு ஒளியையும் அறியாமைக்கு இருளையும் ஒப்பிட்டால் இருள் தேவையில்லை என்ற பொருளா? 'அள்ளிக் கொள் வண்ண குறுமகிழ வாயினும் கள்ளி மேல் கை நீட்டார்' என்ருல் கள்ளிச் செடியே முளைக்கக் கூடாதா? 'நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்ருல் புல் பூண்டற்றுப் போக வேண்டுமென்ற பொருளா? 'நிலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலவென்று காட்டுகின்ருய் ஒளிமுகத்தை' என்ருல் வானமென்ருல் ஆடையா? நிலவென்ருல் உடலாகி விடுமா? உங்களுக்குத் தமிழறிவு இல்லையென்ருலும் நம் ஏழை எளிய மக்கள் அன்ருடங் கூறும் பழமொழிகள், சொலவகங்கள் காதில் விழவில்லையா? 'பறை' என்ன உங்களுக்கு மட்டும் சொத்தோ? சாதிவெறியர் எனக் குறிப்பிடும் உங்களுக்கு பாவலரேறு அவர்களைப் பற்றி என்ன தெரியும்?

'பள்ளென்போம் பறையென்போம்
நாட்டாரென்போம் பழிதன்னை
எண்ணுமல் வண்ணுரென்போம்!
பிள்ளை என்போம் செட்டி என்போம்
முதலி என்போம்! பிழை நாணுது
அருந்ததியர் என்போம் ஆனல்

நமைத் தமிழர் என்கின்ருேமா? எனச் செயலில், வாழ்வில் தம்மைத் தம் குடும்பத்தைத் தமிழுலகிற்கே தந்து எடுத்துக்காட்டாக விளங்குபவரையா சாதி வெறியர் எனக் கூப்பாடு போடுகிருய்?

அவரது பாடலை பார்! படி! தெளி!

போர்ப் பாட்டு -1952

முரசே முழங்குக! முரசே முழங்குக!
முரசே முழங்குக, நீ!
அரசே செந்தமிழ் அரசே வாழ்கென,
முரசே முழங்குக, நீ!
சங்கே ஊதுக! சங்கே ஊதுக!
சங்கே ஊதுக நீ!
எங்கோ மூவர் ஏற்றிய தமிழைச்
சங்கே ஊதுக, நீ!
பம்பை பம்புக. பம்பை பம்புக!
பம்பை பம்புக நீ!
எம்பைந் தமிழரசோச்சுக என்றே
பம்பை பம்புக, நீ!
கொம்பேஅலறுக! கொம்பே அலறுக!
கொம்பே அலறுக; நீ!
எம்பே ரிசைத் தமிழ் எங்கனும்
முழக்கிடக் கொம்பே அலறுக, நீ
கரடிகை உறுமுக! கரடிகை உறுமுக !
கரடிகை உறுமுக, நீ!
நெருடர் நுழைக்கும் வடமொழி
விரட்டிட கரடிகை உறுமுக, நீ!
முழவே முரலுக! முழவே முரலுக!
முழவே முரலுக, நீ!
கழலணி மறவர்கள் விறல்பெற-
நடந்திட முழவே முரலுக, நீ!
பறையே பிறங்குக! பறையே பிறங்குக!
பறையே பிறங்குக, நீ!
பொறையே கொண்டவர் பொங்கிடில்
தீதெனப் பறையே பிறங்குக, நீ!
உறும்பே கறங்குக! உறும்பே கறங்குக!
உறும்பே கறங்குக, நீ!
உறும்பே ரிடும்பினும் உணர்வுளோம் யாமென
உறும்பே கறங்குக, நீ!

கறங்குக முரசம் ! வெண்சங்கம் ! -1959
கரடிகை பம்பை உறுமுகவே !
காட்டுப்புலியே ! நீ வளர்த்த
கன்னித் தமிழ்க்குன் உயிர்செகுப்பாய் !
பிறங்குக நின்பேர்! திறம் பூண்க!
பெரிதோ பிறன்கை வெண்சோறு !
பிறந்தாய் அன்றே இறந்தாய் நீ!
பேசா அடிமை வாழ்வதுவோ?
இறங்குக உரிமைத் தனிப் போரில்
ஏடா, இளமைத் தமிழ் மகனே !
இறப்பினும் சுவையோ இழி வாழ்க்கை?
இருகண் மூடிச் செவி மூடி
உறங்குதல் நன்ருே இது போழ்தே !
உணர்வாய் எழுக எழுகவே !
ஒட்டாப் போக்கை உடன் வெட்டி
உகுப்பாய்! எழுக! எழுகவே !

வில்லெடுத்துப் போரிட்ட விறலெங்கே? வெற்றி பெறும் மணிமார்பெங்கே? கொல்லவரும் வெம்புலி மேல் குறிதவரு தெய்கின்ற கூர்வேலெங்கே? சொல்லெடுத்துப் பேசிடவும் அஞ்சுகின்ருய்! சோற்றுக்கு மானம் விற்ருய்! மல்லெடுத்த இந்திக்கு மருள்கின்ருய்! தமிழா நீ! இறத்தல் நன்றே! -1964

என்னைக் கடுஞ்சிறை இட்டதால் என்னுளம்
முன்னினும மூளுமோ? முங்கி ஒழியுமோ?
சீர்த்துப் பாய்ந்திடும் சிறுத்தையின் கூருகிர்
ஆர்த்த நெடும்புல் அசைவில் வழுக்குமோ?
மதர்த்தெழு களிற்றின் மலையுடல் தூண்கால்
பதர்க்குவை கண்டு பதுங்கி யொடுங்குமோ?
பொங்கு பேரலைப் போக்கினை வீழ்சிறு
தெங்கின் குரம்பை தேக்கி நிறுத்துமோ?
தீக்குழம்புருக்கித் தெறிக்கும் எரிமலைப்
பாக்குழம்பினை யொரு பழம்பாய்த் தடுக்குமோ?
எழுந்த வல்லரி ஏற்றின் உறுமலைப் -1965
பழம்பறை கொட்டொலி பரக்கச் சிதர்க்குமோ-

போதுமா? இன்னும் ஆயிரம் 'ற' கர மேற்கோள் காட்டவா? கருவியை உவமானப்படுத்தினுல் கருவியைச் சாதி, ஆக்கிக் களிக்கின்ருயே? மரபுப் பாடல் இல்லாவிடினும் உம் 'வசன கவிதை'களில் எத்தனை உவமானம் காட்டுகிருய் என்பதைக் கூறவா? இவ்வேடு அடங்காது! சாதிவெறி பிடித்தலையும் பேய்களே! தாள் விற்பனை போகிறதென்ருல் உங்களின் தன்மானமும் விலை போயிற்ரு? மேற்கோள் என்ன? தென்மொழி அகத்துக்கு வாருங்கள்! பாருங்கள்!

அண்மையில் விடுதலை போராளிக் (ஈழம்) குழுக்களிடையே சண்டை என்றவுடன் உச்சி குளிர்ந்து உம் வெறுப்பை உமிழ்ந்தாயே! 18 கல் அளவிலே நாடோறும் நடக்கின்ற கொடியவன் சே. ஆரின் கொலைகளைக் கண்ணுருது கண்டும் காணுதது போல், இருந்து விட்டு எங்கோ நடக்கும் கொரில்லாப் பயிற்சி வீரர்களையும் - அங்குப் போராளிகள் கொலை செய்யப் பட்டக் காட்சிகளையும் படமெடுத்துப் போடுகிருயே? உன் நாட்டில் உன் ஊரில் நடைபெறும் ஈழப் போராளிகளின் பயிற்சிகளையோ, ஒன்றுமறியாத் தமிழர்கள் கொலை செய்யப்பட்டு வீதியில் வீசியெறிந்திருக்கின்ற காட்சிகளையோ படமெடுத்துப் போடுவது தானே! அங்கும் பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்தால் போடுவீர்களா, எப்படியோ! தமிழ் மக்களின் பிணக்காட்சிப் படம் மட்டும் உமக்கு கிடைக்கவில்லை! அது என்ன பொதுவுடைமையோ, இழவோ தெரியவில்லை!

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

தமிழக விடுதலையே தமிழின முன்னேற்றம்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்,
உணர்வும், உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! தி ந்த லந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3) இதழ் எண் 76 (2-11-1986) (பகதி 23-29

இந்திச் சிக்கல்!

''இந்தியாவை இழந்தாலும் இழப்போம்; இந்தியை இழக்க மாட்டோம்'' என்பது வடநாட்டு இந்தி வெறியரின் கொள்கை!

''இந்தியாவும் வேண்டாம்; இந்தியும் வேண்டாம்; தமிழ் நாட்டைத் தனியாகப் பிரித்துக் கொடு; தமிழர்களாகிய நாங்களே ஆண்டு கொள்கிறோம்'' என்பதே இங்குள்ள - என்பது மட்டும் அன்று,- உலகில் எங்குமுள்ள-தமிழர் எனப்படுவோரின் கொள்கை!

வடநாடும் தென்னாடும் இவ்வாறு வேறுபடுகின்றன. இவ்விரண்டு பகுதிகளுக்கும் இடையில் உள்ள, இந்தி வெறியர்கள் வாழும் உத்திரப் பிரதேசத்தையும், மத்தியப் பிரதேசத்தையும், சார்ந்த பிற வட மாநிலத்தவர்களும், தென்னாட்டைச் சார்ந்த பிற மலையாள, தெலுங்கு, கன்னட மாநிலத்தவர்களும் ஆரியத்தாலும் சமசுக்கிருதத்தாலும் அடிமைப் படுத்தப்பட்டவர்களே! அவர்களுக்கு ஆரியம் இல்லாமற் போனாலும், சமசுக்கிருதம் இல்லாமற் போனாலும், தங்களுக்கென மொழி அடிப்படையில் ஒரு வடிவமும் இல்லை, இன அடிப்படையில் ஒரு வரலாறும் இல்லை என்பதை அவர்களும் பிறரும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுதுள்ள அரசியல், இனவியல்,மொழியியல் இந்தியா என்பது, இப்படி உள்ளது! எனவே இங்குப் போராட்டங்கள் மிகுதி; பொருதல்கள் அவற்றினும் மிகுதி. இந்தியா ஒன்றாக இருக்கும் வரை, அஃதாவது இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை பேசப்படும் வரை, இப்போராட்டங்களும் ஓயப்போவதில்லை; பொருதல்களும் மாயப் போவதில்லை.

'ஊர் இரண்டு பட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல, இந்தியாவிலுள்ள இவ்வேறுபாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு. இன முறையில் ஆரியப் பார்ப்பனர்களும், அரசியல் முறையில் இங்குள்ள பொதுவுடைமைக்காரர்களும், பொருளியல் முறையில் இங்குள்ள வணிக, முதலாளியக் கும்பல்களும் தங்கள் தங்கள் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், மதம் சாதி- என்னும் பெயர்களாலும், மார்க்சியம், முதலாளி- தொழிலாளி என்னும் பெயர்களாலும், ஒற்றுமை, ஒருமைப்பாடு என்னும் பெயர்களாலும் குழப்பங்களை விளைவித்து, இவ்விந்தியச் சந்தையைத் தங்கள் தங்கள் வாழ்வியல் களமாகப் பங்கு போட்டுக் கொண்டு, தங்கள் காலக் கழிவுகளைச் செய்து வருகின்றன.

இப்போராட்டக் கொள்ளையடிப்புக் கூத்தாட்டங்களுக்கிடையில், இந்திய வரலாற்றின் பழம்பெருமைத் தனி மூல இனமான தமிழினம், தன் பண்டைய வரலாற்றுச் சுவடுகளையும், மொழி இனச் சிறப்பியல்புகளையும், கலை, பண்பாட்டுக் கூறுகளையும் கைவிட்டும், விடாமலும் சிக்கிச் சீரழிந்து கொண்டு வருகிறது.

இத் தமிழினத்திற்குள்ள பல்வேறு வாழ்க்கைப் போராட்டங்களுள் இந்த இந்திச் சிக்கலும் ஒன்று! இதன் ஆதி தொடக்கமான தமிழ் சமசுக்கிருதப் போராட்ட நிலை கடந்து, இன்றுள்ள தமிழ் -இந்திப் போராட்ட நிலையாக இது வடிவெடுத்துள்ளது.

இந்திக்குப் பின்னால் சமசுக்கிருதமும், திரவிடத்துக்குப் பின்னால் தமிழும்- என்ற நிலையில், இவ்விந்திப் போராட்டம் இன்றைய வரலாற்று, பாரந்த இன வளர்ச்சிகளுக்குப் பின்னால் இருந்து வந்த ஆரிய தமிழினப் போராட்டமே என்பதைப் பலரும் உணர்ந்து கொள்வதென்பது கடினமே!

• எனவேதான் இவ்விந்திப் போராட்டம் என்பது எளிதில் தீராத தீர்க்க முடியாத போராட்டமாகக் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தொடர்ந்து நடந்து வந்து கொண்டுள்ளது.

வெறும் அரசியல், வாழ்வியல் பொறுக்கித் தின்னிகளாக இங்குள்ள இந்திராப் பேராயக் கட்சி அடிமைகள் இவ்வின, மொழி, வரலாற்று உண்மைகளை உணர்ந்து கொள்ள முடியாது. அவர்களின் கவலை முழுவதும் குழம்பிய குட்டையில் பிழைப்பு மீனைப் பிடிப்பதே.

நல்லவேளை! இந்தியெதிர்ப்பு என்னும் மொழிச் சிக்கல் இன்று அரசியல் சிக்கலாக உருமாறி வளர்ந்து விட்டது! இனி, இஃது இனச்சிக்கலாகப் படிநிலை வளர்ச்சி பெற்றுப் பூதாகரமாக உருமாறுவதற்கு நீண்ட காலம் பிடிக்காது அந்த நிலையில்தான், தமிழினம் தான் இழந்து போன அனைத்துப் பெருமைகளும் கொண்ட மொழி, இன, பண்பாட்டுக் கூறுகளையும், அரசியல், வாழ்வியல், ஆட்சி அதிகாரங்களையும் மீட்பதற்கு நேரடியாகப் போராட முன்வரப் போகிறது.

அதன் முன்னோட்டமான போராட்டமே, தமிழினத்தின் இருபதாம் நூற்றாண்டுச் சட்டாம் பிள்ளையான, தமிழின வரலாற்று நாடகத்தின் கட்டியங்காரரான கலைஞர் கருணாநிதி அவர்கள் கையெடுத்துள்ள இந்திச்சட்ட எரிப்புப் போராட்டம்! இதனை எல்லாருமே வெளிப்படையாக விளங்கிக் கொள்ள இயலாது! இதனை அடுத்து, அவர்தம் வாழ்வுக்குள் வேறு, மொழி, இன, நாட்டு நலப் போராட்டங்களையும் தொடரலாம் என்பது நம் கருத்து! தொடர வேண்டும் என்பது நம் எதிர்பார்ப்பு! இனி தொடர்ந்துதான் ஆக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்!

எனவே, அவரின் இந்தியெதிர்ப்புப் போராட்டத்தை நாம் நம் இருகைகளையும் தூக்கி ஆதரிக்கின்றோம்! வாயார வாழ்த்தி வழியனுப்புகின்றோம்! தேவையானால், நாமும் அதையே பின்பற்றிப் பின்தொடரக் காத்திருக்கிறோம்; கால, நேரம் பார்த்திருக்கிறோம்! வெல்க கலைஞரின் இந்தியெதிர்ப்புச் சட்டப் போராட்டம்! வாழ்க அவரது இனநல முயற்சி!

-பெருஞ்சித்திரனார்

கருத்தரங்கு பற்றி ஒரு மடல்!

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு!

அன்புடைய அய்யா அவர்களுக்கு 'பாவேந்தர்' அ.இராமலிங்கம் எழுதும் மடல். தென்மொழி வாயிலாகத் தாங்கள் அறிவித்திருந்த தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கம் பற்றிய செய்தியறிந்து உள்ளம் மகிழ்ந்தோம். வரும் திசம்பர் திங்கள் 27 28 இல், சென்னையில் கூடி, தமிழினத்தின் தலையெழுத்தை மாற்றி எழுதுவான் வேண்டி, எழுச்சி மிக்க ஓர் தாயாகம் நிறைவேற்றப்பட்டு, அதைச் செயல் படுத்தத் துடிக்கும் தங்களின் விடுதலை வீறு எங்களை விம்மிதப டையச் செய்கிறது! விரைந்து தங்களுக்கு உதவ எங்கள் உணர்வுகள் துடிக்கின்றன. ஊமைகளாய் உணர் விழந்து வாழும் தமிழர்களுக்குப் புத்தெழுச்சியூட்டிப் போராட்டக் கலம் அமைத்துக் கொடுத்துப் புதிய புறநானூற்றைப் படைக்கப் புகுந்த தங்களுக்குத் தோள் கொடுத்து நின்று, விடியாத இரவாக இருக்கும் தமிழகத்தில் விரைவில் விடுதலையாம் விடிவெள்ளி தோன்ற வீறு கொண்டு செயல்படுவோம் என்பதை மாறாத கொள்கையுரத்துடன் கூறிக் கொள்கிறோம். எண்ணித் துணியும் நமதிச் செயலுக்கு வெற்றி திண்ணம் என்று கூறித் திசம்பர் 27 இல் சென்னையில் தலைக்கூடுவோம் நாலமென்றும் செயல் படுவோம் புயலாக என்றும் கூறி முடிக்கிறேன்.

-அன்புள்ள: பாவேந்தர் இராமலிங்கம்

(3-ஆம் பத்தித் தொடர்ச்சி)

மொழிச் சிறப்பு - ஆரியர் வருகைக்குப் பின் ஏற்பட்ட தளர்ச்சி - தமிழ்மொழியும் தமிழினமும் காக்கப்பட வேண்டியதன் தேவை தனித்தமிழ் வளர்ச்சி நிலையில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் முப்பதாண்டுக்கால உழைப்பு - தென்மொழி, தமிழ்ச்சிட்டு - தமிழ் நிலம் இதழ்களின் வழி ஏற்பட்ட விளைவு பெரியாரின் பெரும் பணி - பாவலரேறுவின் நாடு, இனம் மொழி எனும் முப்படிக் கொள்கையும் வினைத்திறனும் - தமிழர்கள் செய்ய வேண்டிய கடப்பாடு என்பன குறித்து இரண்டு மணி நேரப் பேருரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியின் நிறைவில் திருக்குறள் நெறி பெரியார் பாதை - பாவலரேறுவின் தனித்தமிழ் வழி தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ந்தது. இதில் தென்மொழி அன்பர்கள் தமிழ் நெறியன், அறிவுச் செல்வன் அ. இனியனார், பொ. திருமால், சரு.இராசகோபாலன்,கோ. நல்லதம்பி,முதலியோர் பங்குகொண்டனர். பாவலர் தமிழ் நெறியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

இவ்விரு நிகழ்ச்சிகளின் இறுதியில் அனைவருக்கும் திருக்குறள் அட்டையும் தேநீரும் வழங்கப் பெற்றது. வெளியூர் அன்பர்கட்கு புலவர் திருக்குறள் நாவை. சிவம் அவர்கள் இல்லத்தில் விருந்தளிக்கப் பெற்றது.

- செய்தி: தமிழ்மகன், மணப்பாறை

மணப்பாறை - திருக்குறள் பயிற்றகத்தின் திருக்குறள் கலந்துரையாடல் நிகழ்ச்சிகள்

மணப்பாறை- வழிச்செல்வோர் விடுதியில் தி. பி 2017 விடை 11 (25-5 1986) ஞாயிறு மாலை 6-30 மணியளவில் திருக்குறள் பயிற்றகச் சார்பில் திருக்குறள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. திருக்குறள் பயிற்றக அமைப்பாளரும், நெடிய காலத் தென்மொழித் தொண்டரும், உலகத் தமிழின முன்னேற்றக் கழக மணப்பாறை வட்டச் செயலரும் தனித் தமிழ் ஆசிரியருமான புலவர் திருக்குறள் நாவை. சிவம் அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார்கள். பெரியார் சிந்தனையாளரும், பயிற்றகத்தின் மதிப்பியல் தலைவரும், தென்மொழிப் பற்றாளருமான பெரியவர் திரு. அ. இனியனார் அவர்கள் தலைமை ஏற்றிட, பாவலரேறுவின் தமிழன்னை வாழ்த்துப் பாடலை சிவ. தமிழ்மலர், சிவ. தளபதி தமிழழகன் என்னும் செந்தமிழ்ச் சிட்டுகள் பாடினார்கள். நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரும் ஒவ்வொரு திருக்குறள் கூறியும், தமிழில் ஒப்பமிட்டு அறிமுகம் செய்து கொண்டனர். ''தமிழே குறி! குறளே நெறி! என்னும் நோக்கில் நடையிடும் '*திருக்குறள் பயிற்றக*' நோக்கம, பணிகள் பற்றி உரையாற்றிய புலவர் திருக்குறள் நாவை. சிவம் அவர்கள், ''திருக்குறள் தரும் இன நலச் சிந்தனைகள்'' என்ற தலைப்பில் கலந்துரையாடலைத் தொடங்கி வைத்து, திருக்குறள்- குடியியலில் வரும் கருத்துகள் யாவும் இன நல மேம்பாட்டிற்காகவே கூறப்பட்டவையென்றும், தமிழும், தமிழினமும் ஈடேறத் திருக்குறள் நெறி பரவவேண்டுமென்றும் தமிழர் எல்லாரிடமும் திருக்குறள் நூல் கட்டாயம் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். இதைத் தொடர்ந்து தோழர் தட்சிணாமூர்த்தி புலவர் சோதிவேலன் ,காடிப்பட்டி க. கண்ணன், அறிவுச்செல்வன், தமிழ்நெறியன் முதலிய தென்மொழி அன்பர்களும், பிற அரசியல் இயக்க அன்பர்களும், ஆலைத் தொழிலாளர்களும் அலுவலகப் பணியாளர்களும் கலந்துரையாடலில் கலந்து கொண்டும் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டும் திருக்குறள் இன்பம் பெற்றார்கள். பயிற்றகச் செயலரும், தென்மொழி அன்பருமான பாவலர் தாழை ந. இளவழகன் நன்றி கூறினார்கள்

இதையடுத்து. தி. பி. 2017 விடை 18 (1-6-36) ஞாயிறு மாலை 6-30 மணியளவில் மணவை- வழிச் செல்வோர் விடுதியில் புலவர் கரிகாலன் தலைமையில் திருக்குறள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது பாவலரேறுவின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை செல்வன் சிவ தளபதி தமிழழகன் பாடினான். தலைவர் முன்னுரைக்குப்பின், நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரும் திருக்குறள் கூறி அறிமுகமானார்கள். அமைப்பாளர் புலவர் திருக்குறள் நாவை. சிவம் அவர்களின் வரவேற்புரைக்குப் பின் நினைவுக் கலை ஏந்தலும், பதின்கவனகரும், திருக்குறள் அறிஞருமான கோவில்பட்டி திருக்குறள் பெ. இராமையா அவர்கள் மறைவுக்கு அனைவராலும் 2 நிமிட அமைதி இரங்கல் தெரிவிக்கபட்டது '*திருக்குறள் இராமையா தெரியுமா?*'' எனும் இசைப்பாடலை புலவர் நாவை சிவம் அவர்கள் பாடி இரங்கல் நிகழ்வை நிறைவு செய்தார்கள். அதன் பின் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலரும் தென்மொழிப் படை மறவருமான தென்னவன் கோ அவர்கள் திருக்குறள் கலந்துரையாடல் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, மாந்த உயிர்த் தோற்றம்- அதன வளர்ச்சி - தமிழின மக்கள் மலர்ச்சி

(தொடர்ச்சி 2-ஆம் பத்திப் பார்க்க)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுடன் தோளோடு தோளாக இணைந்தே நிற்போம் என்பதும். தேவையானால் போராட்டக் களத்தில் குதித்து நம்மை முழுமையாக ஈடுபடுத்தியும் கொள்வோம் என்பதும், நாம் அவர்களுக்கு குருதியால் எழுதிக் கொடுக்கும் விடுதலை உறுதிப் பட்டயமாகும்!

ஆயிரம் கோடித் திண் தோள்கள் உண்டு! - எந்த
ஆட்சிக்கும் அஞ்சுவமோ? -அட
வாயுரம் காட்டி,வல் லாண்மைகள் செய்யினும்.
வஞ்சரைக் கெஞ்சுவமோ? -பெற்ற
தாயினும் மேலான தமிழ்நிலம் மீட்பதில்
தயக்கமும் தாழ்ச்சியும் ஏனோ? -ஒரு
நாயினம் புலிகளை ஆளுவதோ - நரி
நாயகம் செய்வது வோ?

மூண்டெழு வீர் தமிழ் வீரர்களே! -இனி
வீழ்ச்சி நிலைகளில்லை! - நாம்
ஆண்ட மறவர்கள்! சீறும் சிறுத்தைகள்!
அல்லல்கள் ஏற்பதில்லை! புல்
பூண்டுகள் யானை தடுப்பதுவோ? மேகம்
பொருதி மலை கரைமோ? - கடல்
பொங்குவதை ஒரு துரும்பும் தடுக்குமோ?
போர்க்குணம் தூங்கிடுமோ?

வெல்க தமிழக விடுதலை! வாழ்க போராளிகள்
வளர்க அவர்கள் தாயக வேட்கை!

இந்திச் சட்டம் எரியட்டும்!

பறம்பை அறிவன் பக்கம்:

1. தமிழ்த் தெய்வம்...

தோழமை நெஞ்சங்களே!

நாம் தெய்வத்தைப் பற்றியோ. அதன் நம்பிக்கை பற்றியோ, வழிபாட்டைப் பற்றியோ கவலை கொள்ளாமல் இருந்து விட்டோம். ஆனால், தமிழ் மக்கள் அப்படியில்லை. அவர்களின் வாழ்க்கை உயிரச்சத்தை அச்சாகக் கொண்டு | சுழல்கிறது. காரணம் அவர்கள் ஆளும் அதிகாரமோ, உரிமையோ அற்றுப் போயிருக்கிறார்கள்,

சீனத் தலைவர் மாஓசேதுங், நாட்டுப் புற மக்களின் கோழி, ஆடுகளை அவர்களின் ஒப்புதல் இல்லாமல் உணவாகக் கொள்ள வேண்டாம் என்று தமது நீண்ட செலவுப் போர்க் காலத்திலும், தம் தோழர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அம் மக்களின் நம்பிக்கையை மதிக்கத் தெரிந்து மக்களிடம் உண்மையாக நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதே அவரது கருத்தாகும். அக் கோழி, ஆடுகளை அவர்கள் தங்களின் வழிபடும் தெய்வங்களுக்கு நேர்த்தி செய்திருக்கக்கூடும் என்பதை மாஓசேதுங் நன்குணர்ந்தே அவ்வாறு தம் தோழர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

எனவே நாம் நம் தேசிய இனத்தின் வழி பாட்டுரிமையை மதிக்கவும், அதனை ஒடுக்க நினைக்கும் போக்கினைத் தவிர்க்கவும் வேண்டும். இணிப்பு கட்டாயம் என்ற முறையில் மக்களை மாற்றுதல் என்பதியலாது. எனவே, நாம் நம் தேசிய இனத்தின் தெய்வ வழிபாடு பற்றிக்கற்றறிய வேண்டியவர்களாக உள்ளோம். அவ் வழிபாட்டில் எப்படி அயலவரின் முரட்டுப் பிடி ஏற்பட்டது? பண்பாட்டுக் கட்டமைப்பைச் சிதைத்து, ஓர் அயன்மையான வாழ்க்கைக்கு எவ்வாறு தமிழின மக்கள் தள்ளப்பட்டார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

தமிழ் மக்களின் முன்மை, மேன்மைகளையும் ஏற்ற இறக்கங்களையும் நாம் ஒட்டுமொத்தமாக அறிய வேண்டுமாயின் வழிபாட்டுச் சமய உண்மைகளைப் பற்றியும் அறிதல் வேண்டும்!

'தமிழருடைய தெய்வம் சிவம்' என்றால், அதனைச் சுடர் என்றும் ஒளியென்றும், செவ்வொளி என்றும் போற்றாமல் 'சோதி' என்று கூறுதல் தமிழாய்ந்தவர்க்குத் தகாத செயலாகும்; ஆகவே வடலூர் வள்ளலை வாழ்த்தும் பொள்ளாச்சி மகாலிங்கனார் போன்றவர் எண்ணிப்பார்த்திடல் வேண்டும்!

தமிழர் மதம், தமிழர் பண்பாடு தகர்ந்தும், சிதைந்தும், புதைந்தும் கிடப்பதா? அதனை இயல் பாக அறிய விடாமல் தடுக்கும் பிடிகளிலிருந்து விலகி விடுதலை காண்பது வேண்டும்.

இன்றைய அறிவியல் வளர்ச்சியோடு கூடிய மாற்றங்களைத் தமிழினம் அனைத்துத் துறை களிலும் பெறுதல் வேண்டும் என்பதில் இருகருத் தில்லை. ஆனால், அப்படி இன்றில்லை. 'இந்து' என்ற மயக்கம் தலைக்கேறி, மூட நம்பிக்கை என்ற மூளையடித்துக் கட்டப்பட்டுக் கிடக்கும் மக்களைச் சமயவாணர்கள்- தமிழினத்துள்ளவர்கள் எண்ணிப் பார்ப்பார்களா!

'தமிழ்த்தெய்வம்' என்ற [தளம் மறைந்து கிடப்பது போன்றே தமிழன மேன்மையும் இருட்டிப்புக்குள்ளாக்கியுள்ளது.

2. புதிய புதிய...

தோழமை நெஞ்சங்களே,

'புதியன' பற்றிய கருத்து நாட்டம் மக்களிடம் அதிகம். இந்த நாட்டத்தால் ஏற்படுகின்ற நன்மை, நலிவு பற்றிச் சிந்திக்க முடியாத நெருக்கடிகள் உள. இவற்றை அரசும், வல்லரசுகளும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றன.

இந்திய அரசு புதிய கல்விக் கொள்கை, புதிய சவுளிக் கொள்கை, என்ற புதிய கொள்கைப் பட்டியலை விரித்துக் கொண்டிருக்கிறது.

புதிய மனிதன், புதிய சனநாயகம், புதிய கலாச்சாரம் என்ற ஏடுகள் 'புதிய' அடைமொழிக ளோடு புறப்பட்டுள்ளன. புதிய தமிழகம் தோன்றி வருகிறதோ என்னும் நினைப்பில் நெஞ்சை உயர்த்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், கூட்டம் கூடியதே தவிரக் கொள்கைப் பிடிப்பு ஏற்பட்ட தாக இல்லை! இவற்றின் வரிசைகளில் நம்பிக்கை உள்ளதா? ஆம், எனில், திரைப்பட நேயர்களின் கூட்டம் குறைந்திருத்தல் வேண்டுமே! 'புதிய' உத்தரவுகளை' அரசு மட்டுமன்று, கட்சிகளும் இயக்கங்களும் போடுகின்றன. ஆனால் அவை 'சடங்கு'களாகி முடங்கி விடுகின்றன. மக்களின் நலன்களை நடுவப்படுத்தில் சுழன்றேறுத இயக்கங் களையே நாம் காண்கிறோம்! அத்தகைய இயக்கங்கள் தோன்றி வரும் அறிகுறி உளது. ஆயினும், அவற்றை ஏற்படுத்தும் ஆர்வம் குமுகவியல் கற்ற வரிடம் ஏற்படுதல் வேண்டும். அப்போதே, இயக்கம் உருவாதல் இயலும்!

வியத்நாமில் பொதுமைக் கட்சி தன்னை அடிக் கடி புதுப்பித்துக் கொண்டு போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது. ஆகவே, அஃது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவும், அமெரிக்க வல்லரசியத்தை எதிர்த்து நிற்கும் தகுதியுடையதாக இருந்தது.

இந்தியத் தேசியத்திலிருந்து விடுபட்டு திராவிடத் தேசியத்திலிருந்து தன்னைப் புதுப்பித்துக் கொண்டு 'புதிய தமிழக' இயக்கம் உருவாகும் என்ற நம்பிக்கை ஒளி தெரிகிறது.

ஆயினும், பழைமையான பாதையில் சுற்றிச் சுற்றி வந்துள்ள இயக்கங்கள் அப்படியொன்றும் எளிதாகத் தங்களைப் புதுப்பித்துக் கொள்ளும் என்று நம்புதல் இயலாது என்ற போதும், புதிய தலைமுறைகள் தங்களை இணைத்துக் கொண்டு புதிய இயக்கங் காணும் என்பதென்னவோ உறுதி!

இன்று பழைய கட்சிகள் பிளவுபட்டுப் போவதும், புதியகட்சிகள் தோன்றி வருவதும், மறைவதும் மக்களிடையே ஒரு மாற்றத்திற்கான முயற்சி மேலோங்கி வருவதை [உணர்த்தும்!

இப் புதிய முயற்சிகள் இந்த மண்ணின் பண்பாட்டடியில் எழுகின்றன. அவை தேசிய இயக்கங்களை வலிமை செய்யும்; தேசிய இன ஒடுக்கு முறைகளைத் தூள்படுத்தும் எனலாம்!

3. தமிழின மகளிரே...

பெண்ணின் பெருமை'யைத் திரு. வி. க. எழுத லாம். நாட்ட புகழலாம். ஐயையும், கொய்யாக் கனியும் படித்துப் புத்துணர்ச்சி எய்தலாம். மகளிர்க் கான அமைப்புகள் ஆயிரம் கட்டலாம். ஆனால், தன்னுணர்வும், விடுதலையார்வமும், தமிழர்க்குரிமை யும் அற்றபோது, இவற்றால் விளைபயன்?

'பிரமிளா'வாம்; புகழ்பெற்ற நடிகையாம். அப் பெண்ணின் கருத்துரையைப் படம்போட்டுக்காட்டி 'இன்றைய இந்தியா' (India Today 15-5-86) மகிழலாம்! வணிகம் பண்ணலாம்!

"நான் ஆடையை உரித்து போடவில்லையானால் என்ன? கோடம்பாக்கத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் திரையில் அம்மணமாசக் 'காட்சி' அளிக்க அணியமாகவுள்ளார்கள். கதையின் பாதையில் தேவைப்பட்டால் என் மேனியைத் 'திறந்துகாட்ட'த் தயங்கமாட்டேன்" என்று பிரமிளா கூறுகின்றார். இதை 'இன்றைய இந்தியா' (India- Today) வெளி யிட்டிருக்கிறது.

திரையுலகமும், எழுத்துலகமும், பெண்களின் சதை வணிகத்தைக் கலையாகச் செய்து வருவதற்கு 'இந்திய ஒருமைப்பாடு' நமக்கு வேண்டியதுதான்! தமிழர்ப் பண்பாடும் 'இந்தியா' வில் உள்ள பல்வேறு தேசிய இனங்களின் பண்பாடும் தவிடுபொடியாகிப் போவதைப் பற்றிக் கவலைப்பட 'இந்தியர்'களில் எவருமிலர். இவர்களின் 'தேசிய நீரோட்டம்' என்ற கூக்குரல், 'அவியலாகி' அம்பணமாகிக் கொண்டிருக் கும் பன்னாட்டு, வல்லரசியப் பொருளியல், அரசியல் களால் அம்பலப்பட்டு நிற்கின்றது.

தமிழ்நாட்டுப் பெண்கள் சீரழிந்து கொண்டிருக் கும் பண்பாட்டை முறியடிக்கத் தமிழின விடுதலை உணர்ச்சி கொள்வார்களாக!

மார்வாடிப் பொருளியல், தமிழர்களின் வாழ்க்கையைத் தாக்கி வருவதையும், குடும்பம் குடும்ப மாகச் சீரழிந்து வருவதையும் சென்னை கோடம் பாக்கம் மகளிர் பற்றி நடிகை பிரமிளா கூறியதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இதற்குத் தீர்வு காண **வளமான விடுதலையுடைய, தன்னாட்சி யுள்ள தமிழகம் வேண்டும்** என்பதில் தவறு எதுவாக இருக்க முடியும்? 0

'சியோல்' ஆசிய விளையாட்டில் இந்தியா!

இதுவரை எந்த விளையாட்டுகளிலும் கலந்து கொள்ளாத அளவு எண்ணிக்கையில் இந்தமுறை 'சியோலில்' நடைபெற்ற ஆசிய விளையாட்டிற்கு இந்தியா ஆட்களை அனுப்பியிருக்கிறது.

விளையாட்டாகப் போட்டிகளில் கலந்து கொள் வோர்கள் 215 பேர்களும், அவ் விளையாட்டு களைக் கண்டுகளிக்க அரசுச்சார்பில் 116 பேர்களும் அனுப்பப் பெற்றனர்.

அவ்வகை விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவிற்காக முதலில் பதக்கம் வாங்கித் தந்தவர் திரு. குமாரசாமி எனும் தமிழரே. ஆனால் அவரைப் பற்றிய செய்தியைக் கூட சரிவர வெளி யிடாமல், ஊக்கப்படுத்தாமல் விட்டு விட்டது அரசு.

தமிழக அரசும் அன்னாருக்கு ஏதேனும் பாராட்டோ, அன்பளிப்போ செய்ததாகத் தெரியவில்லை.

இந்தியாவில் தமிழர் இரண்டாம் தரக் குடியின ரகா வாழ்வதினால் தானே இவ்விளைவுகள் எல்லாம்.

பாவலரேறு பங்கேற்ற நிகழ்ச்சிகள்

1. மணப்பாறையில் திருக்குறள் திருவிழா!

திருச்சி மா. வ. மணப்பாறை திருக்குறள் பயிற்றகத்தின் சார்பில் திருக்குறள் திருவிழா சென்ற தி. பி. 2017 கன்னி-19 (5-10-86) ஞாயிறு மாலை 6 மணியளவு தொடங்கி நள்ளிரவு 2 மணியளவு வரை பல்வகை நிகழ்ச்சிகளுடன் மணப்பாறை மன மகிழ் மன்ற வளாகத்தில் சீருற நடைபெற்றது.

குறளும், குறளாசான் படமும், கொஞ்சு தமிழும் கோலோச்சும் வகையில் 'திருக்குறள் திருவிழா' அழைப்பு அச்சிடப் பெற்றிருந்தது. அத் துடன் இரு வண்ணச் சுவரொட்டி வழியும், திரைப் படக் காட்சி வழியும், மகிழுந்து வழியும் திருவிழா நிகழ்வுச் செய்தி உள்ளூர் வெளியூர்கட்குத் தெரிவிக் கப் பெற்றிருந்தது.

மணவை வட்ட உ. த. மு. க. வின் 'முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களே வருக! வருக!' எனும் சுவரொட்டியும், திருக்குறள் பயிற்றகத் தின் "திருக்குறளே நம்நெறி" எனும் அறிவிப்பும் மணவை நகர மக்களின் ஆர்வத்திற்குச் சூடேற்றிக் கொண்டிருத்தன.

நெடுநாளைய தென்மொழி அன்பரும் திருக்குறள் தொண்டரும், மணவை வட்ட உ.த.மு.க. செயலருமான புலவர் திருக்குறள் நாவை. சிவம் அவர்களின் இடையறவுபடாத தொடர் முயற்சியாலும் பெரியார் சிந்தனையாளரும், தென்மொழிப் பற்றாளரு மான அ. இனியனார், தென்மொழி அன்பரும், பாவலரு மான தாழை ந. இளவழகன், தமிழார்வமும் தொண்டுணர்வும் சான்ற கரு. இராசகோபாலன், தென்மொழி அன்பர் கண்ணன், தென்மொழிப் பற்றாளர் மு. தமிழ்நெறியன் பகுத்தறிவாளர் கழகத் தோழர் சு. சேகர், மனமகிழ் மன்றத்தைச் சேர்ந்த மு. நல்லதம்பி முதலிய அனைத்துப் பொறுப்பாளர்கள் மருத்துவர் அ. மதனகோபால், பெரியவர் முகமது இபுராகிம் போன்றோரின் அரிய ஒத்துழைப்பாலும் உறுதுணையாலும் திருக்குறள் திருவிழாப் பணிகள் சீருற நடைபெற்றன.

கருவூர், பள்ளப்பட்டி, குளித்தலை, நாமக்கல், பாலப்பட்டி, திண்டுக்கல், வையம்பட்டி, துவரங் குறிச்சி, பாலக்குறிச்சி, புத்தாநத்தம், கொடும்பாளூர் விராலிமலை, தோகைமலை, திருச்சி முதலிய ஊர் களிலிருந்தும் தென்மொழி அன்பர்களும் திருக்குறள் தொண்டர்களும் திருவிழா காண வருகை தந்து சிறப் பித்தனர். உள்ளூர் வணிகர்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள், ஆலைத்தொழிலாளர்கள், தாய்மார்கள், மாணவர்கள் காவல்துறையினரும் திரளாக வந்திருந் தனர்.

'திருக்குறள் திருவிழா காண வருக வருக!' எனும் பதாகை அசைந்து அழைக்கும் மனமகிழ் மன்ற வளாகத்தில் அமைந்த திருக்குறள் மேடையில் 'குளிர்தமிழே குறி? குறளறமே நெறி!' எனும்நோக் கில் இயங்கும் திருக்குறள் பயிற்றகத்தின் எடுப்பான பெயர்ப் பதாகை தொங்கவிடப் பெற்றிருந்தது. அங்கே ஒரு திரைப்படப் பாடல் கூட ஒலிபரப்பப் படாமல், முற்றிலும் புதுமை இசையாக 1330 திருக் குறள் மட்டுமே ஒலியிழை வழி ஒலிபரப்பப் பெற்றது.

சிவ. தமிழ்மலர் எனும் செந்தமிழ்ச்சிட்டு பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தேன் தமிழ் வாழ்த்தினை இசைக்க விழா இனிதே தொடங் கியது. வரவேற்பு, வாழ்த்து, பண்ணிசை பரி சளிப்பு மேடைக்குத் திருக்குறள் பயிற்றக மதிப் பியல் தலைவர் அ. இனியனார் தலைமை ஏற்றார். திருவாளன்மார் ம. கோபாலகிருட்டிணன் (தி. மு. க.); வெ. பெருமாள் (பேராயம்); சி. நடராசன் (அ. தி. மு. க.); பொ. திருமால் (தி. க.); சு. சேகர் (பகுத்தறிவாளர் கழகம்] ;ப. தட்சிணாமூர்த்தி (பொதுவுடைமைக்கட்சி); தோழர் காசிநாதன் (தமிழ்மன்றம்) இ. வெ. அரங்கசாமி (சனதா); அப்பாசாமி (வணிகர் கழகம்); அ. முத்து (சலவையாளர் கழகம்); இல. சு. கண்ணையன் (வழக்குரைஞர்) முதலிய பல்வேறு வகையிலமைந்து சூழ்ந்து நின்ற முன்னிலையாளர்கள் சார்பில் மனமகிழ் மன்றத் தலைவர் மு. நல்லதம்பி அவர்கள் ஊக்கவுரையாற்றினர்கள்.

திருக்குறள் பயிற்றகத்தின் அமைப்பாளர் புலவர் திருக்குறள் நாவை. சிவம் அவர்கள் விழா

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம் பார்க்க)

அடிமைத்தனம் என்பது, இழிவை அறியாமல் இருப்பதே!

பாவலரேறு பங்கேற்ற நிகழ்ச்சிகள்

[4 ஆம் பக்கத்தொடர்ச்சி]

விற்கு வருகை தந்த அனைத்து வகை மக்களையும் அன்பும் ஆர்வமும் பொங்க வணங்கி வாழ்த்தி வரவேற்புரையாற்றினார்கள். திருக்குறள் பயிற்றக நெறிபரப்புச் செயலர் தாழை க. இளவழகன் பயிற்றக அமைப்புப் பணிகள் பற்றிய அறிக்கையைப் படித்தார்.

இராமகுப்பு, ம. கோபாலன் முதலியோர் திருக்குறள் இன்னிசைப் பாடல்கள் பாடினார்கள். தோ. அ. இராமையா, முகமது இப்ராகீம், மருத்துவர் அ. மதனகோபால் முதலியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் வென்ற மாணவ, மாணவியர்கட்கு நகர்மன்ற உறுப்பினர் கூ. ம. பிச்சை அவர்கள் பரிசு நூற்களும் பாராட்டிதழ்களும் வழங்கினார்கள்.

திருக்குறள் திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைத்துச் சான்றோர்கட்கும் மனமகிழ் மன்றச் செயலர் மோகன் குமார், இல. சு. கண்ணையன், முருகானந்தம் ஆகியோர் துண்டுகள் அணிவித்துப் பாராட்டினர்.

திருக்குறள் நினைவுக்கலை மேடைக்குப் புலவர் கரிகாலன் தலைமையேற்றார். தமிழகம் முழுவதும் இலக்கிய விழாக்களிலும், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண் பாராட்டுப் பெற்றுவரும் இளந்தளிர்கள் 12 அகவை- குறளரசி மு. மெகருன்னிசாவும் 8 அகவை குறள்மணிச் செல்வன் மு. அக்மதுவும் பல்வேறு கோணங்களில் கேட்கப் பெற்ற வினாக்கட்குத் தடையேதுமின்றி விடையளித்து அவையினரைக் களிப்பிலும் வியப்பிலுமாழ்த்தினர். நிகழ்ச்சியைக் கண்டுகளித்த அவையினர் அத் திருக்குறள் செல்வங்கட்கு ஆடையாகவும், பொருளாகவும், தொகையாகவும் பரிசுகளை வாரி வாரி வழங்கி, மேலும் மேலும் கலகலப்பூட்டினர். இந் நினைவுக் கலைப் பயிற்சி ஆய்வில் திருவாளன்மார் சி. சோதிவேலன், அ.பழனிச்சாமி, ப. கண்ணப்பன் இர. திருநாவுக்கரசு, மு. தமிழ்நெறியன், இந்திரசித்து, செல்வேந்திரன்,துரைச்சாமி, சிவ. தமிழ்மலர் முதலியோர் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.

இதையடுத்து, திருக்குறள் சிந்தனைப் பொழிவு விருந்து மேடைக்கு, குழித்தலை தமிழ்க்காசு நினைவு இலக்கியக் குழு நிறுவனர் முனைவர் இளமுருகு பொற்செல்வி அவர்கள் தலைமையேற்றார். திருவாளன்மார் திருச்சி தென்னவன்கோ (உ. த. மு. க. துணைப் பொதுச்செயலர்) கடலூர் மணிமாறன், எழில்வாணன், அறிவுச்செல்வன் முதலியோர் ''திருக்குறள் சிந்தனைகள்'' என்ற தலைப்பில் உரையாற்றினர்.

இந் நிகழ்வுக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் திருவள்ளுவப் பேராசான் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து உ. த. மு. க. முதல்வரும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆசிரியரும் தமிழினக்காவலருமான பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் ''திருக்குறள் நெறி'' என்ற தலைப்பில் அறிவும், உணர்வும் சான்ற செறிவும் நிறைவும் கொண்ட சிறப்புப் பேருரையாற்றினர். தமிழ், தமிழினச் சிறப்பு அதன் இன்றைய வீழ்ச்சி- அதனை வென்றெடுக்கும் முயற்சிகள், திருவள்ளுவர் காலம் திருக்குறள் தரும் இன நல உணர்வு- அதனைக் கட்டமைக்கும் கடப்பாடு பற்றி இரண்டு மணி நேரம் அரியதொரு பொழிவு செய்தார்கள.

இறுதியாக நடந்த 'களரிப் பயிற்சி மேடைக்கு' மணவை சரகக் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் கா. தங்கையன் அவர்கள் தலைமையேற்றார்கள். களரி எனும் பழந்தமிழ்ப் போர்ப் பயிற்சி முறையைப் பாலவிடுதி காவல்துறை அய்வாளர் சிவ. செயப்பிரகாசு அவர்களும் பகவதி ஆசான் குழுவினரும் நிகழ்த்திக் காட்டினர். பல்வகைக் கருவிகளுடன் பழந்தமிழ்ப் போர்முறையைவிளக்கக் குறிப்புடன் நிகழ்த்திக் காட்டி, அவையினரின் பாராட்டும் பரிசும் பெற்றனர். அனைவர்க்கும் பயிற்றகத் துணை நெறிபரப்புச் செயலர் கரு. இராசகோபாலன் நன்றி கூறினார்.

அரசியல் ஆரவாரச் சூழலிடையே திருக்குறள் இலக்கியத் திருவிழா புதுமையும் புரட்சியும் கலந்த நிலையில் முதன் முதலாக அமைத்துக் காட்டியதால் பசியையும் பொருட்படுத்தாமல் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அமைதியாக இருந்து, பார்த்துக் கேட்டுப் பயன் பெற்றார்கள். விழிப்புணர்வும் பெற்றார்கள். இவ் வகை வியப்பான விழாவை மாநாடு போல் உருவாக்கிய அமைப்பாளர் புலவர் திருக்குறள் நாவை. சிவம் அவர்களைப் புலமக்களும் பொது மக்களும் பாராட்டி ஊக்குவித்து மீண்டும் ஒரு விழாவை அமைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொண்டார்கள்.

செய்தி : தமிழ்மகன், மணவை

2. கரூர்த் தமிழ்ச்சங்க விழா- பட்டி மன்றம்:

கரூர்த் தமிழ்ச் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் தி.பி. ஆண்டு 2017, கன்னி. 21 (7.10.86) செவ்வாய் மாலை 6 மணியளவில் கரூர் சி. எசு. ஐ. சிறுவர் பள்ளியில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது

முதல் நிகழ்ச்சியாக தனித் தமிழ்ப் பாவலரும் கருவூர் வட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் செயலாளருமான கடலூர் மணிமாறன் அவர்களின், விடியல் விதைகள் - பாத்தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நடைப்பெற்றது,

பின்னர் புதியக் கல்விக் கொள்கையின் நோக்கம் மாநில மொழிகளை ஒடுக்குவதே! —— தேசிய இனங்களை அடக்குவதே! என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. உலகத் தமிழின முன்னேற்றக்கழக முதல்வர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் நடுவர் பொறுப் பேற்றார்கள்.

கரூர்த் தமிழ்ச் சங்கத்தின் சிறப்புத் தலைவர் பாவலர். நன்னியூர் நாவரசன் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள். பின்னர் பட்டி மன்றத்தில் பங்கேற்ற அனைவருக்கும் கரூர்த் தமிழ்ச் சங்கச் சார்பில் பொருளாளர் திரு. மேலைப் பழனியப்பன் அவர்களால் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப் பெற்றன.

கரூர் நகரில் பணியாற்றும் ஆசிரியர் பெருமக்கள் பலரும் அண்டை அயலூர்களில் பணி புரியும் ஆசிரியர்களும் இலக்கிய ஆர்வலர்களும் திரளாகக் குழுமியிருந்தனர். இரு வண்ணச் சுவரொட்டி வாயிலாக நிகழ்ச்சி சிறப்பான முறையில் விளம்பரம் செய்யப்பெற்றிருந்தது.

இந் நிகழ்ச்சி பொலிவுற அமைய, தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர்களாகிய பாவலர். அரங்கராசன். பாவலர். நன்னியூர் நாவரசன், பாவலர், கடலூர் மணிமாறன், பாவலர். கன்னல், மேலை பழனியப்பன் ஆகியோர் அல்லும் பகலும் அயராது உழைத்தது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

'புதியக் கல்விக் கொள்கையின் நோக்கம் மாநில மொழிகளை ஒடுக்குவதே!' என்ற அணியில் திரு காமராசு, க. மு, திரு ப. தமிழ்மணி க. மு, திரு. நாவை. சிவம், க. மு, ஆகியோரும் 'தேசிய இனங்களை அடக்குவதே!' என்ற அணியில் திரு. து. வெள்ளமுத்து க. மு., பேராசிரியர். கருவை. பழனிசாமி, திரு, சுந்தர மூர்த்தி க.மு, ஆகியோரும் உணர்ச்சிப் பெருக்குடன் பல்வேறு எடுத்துக் காட்டுகளுடன் பட்டிமன்றப் பாங்கறிந்து சீரிய முறையில் வழக்காடினார்.

நடுவர் பொறுப்பேற்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் இடையிடையே அணியினர் அவைமுன் எடுத்துரைத்த முகாமையான கருத்துகளைத் தெளிவுபடுத்தி, அதற்கேற்ப விடைகளை அளிக்க வேண்டிய பொறுப்பு அடுத்து வரும் அணியினரைச் சார்ந்தது என விளக்கம் கொடுத்து வந்தது, பட்டி மன்றத்திற்கு சூடும் சுவையும் ஊட்டிய தோடன்றி, அவையோருக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் ஆர்வப் பெருக்கையும் நல்கியது.

நடுவர் அவர்கள் தொடக்கத்தில் 'பட்டி மண்டபமா, பட்டிமன்றமா?' என்பதற்கு விளக்கம் அளித்ததோடு பட்டி என்ற சொல் எந்த வேர்ச் சொல்லின் அடியாகப் பிறந்தது என்பதையெல்லாம் மொழியியல் அடிப்படையில் எடுத்துரைத்த பாங்கு புலவர் கல்லூரியில் மொழிப்பாடத்தைப் பயிற்றுவிக்கும் நிலையை நினைவு கூறவைத்தது என்றே கூற வேண்டும்.

இறுதியில், அவர்கள்,மற்ற மாநிலத்தவர் அனைவரும் தங்களை முறையாக மராட்டியர், கன்னடியர், தெலுங்கர் என்றெல்லாம் பதிவு செய்து கொள்வது போல' அரசின் எந்த ஆவணத்திலும் 'தமிழர்' என்று பதிவு செய்து கொள்ள இயலாதென்றும், நம் வரலாற்றுப் பெருமைகள் அனைத்தும் சிதைக்கப் பெற்று விட்டன என்றும், ஒளி சிறிதும் இல்லாத இருளில் தமிழினம் தள்ளப் பெற்று விட்டது என்றும் ஏறத்தாழ 47 நாடுகளில் வாழும் பதினேழரைக் கோடிக்கும் மேற்பட்ட தமிழினம் இன்றைக்குப் பல்வேறு நிலைகளிலும் தாழ்ந்து வீழ்ந்து கிடக்கிறதென்றும், உரிமையும் உணர்வும் அற்ற நிலையில் ஏதிலியாக, எதுவும் விளக்கிக் கொள்ளாதவனாகத் தமிழன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்றும்' இந்திய நாட்டுப் பார்ப்பன முதலாளிகளின் வல்லாளுமைப் பிடியிலிருந்து தமிழினம் மீள வேண்டுமென்றும் ஏறத்தாழ மூன்று மணி நேரம் அவையோர் மெய்ம்மறந்து கேட்கும் வண்ணம் அரியதோர் உரைப்பொழிவாற்றிப் புதிய கல்விக் கொள்கையானது அனைத்து நிலைகளிலும் தமிழினத்தை அழிக்கவே செய்யுமென்றும், இதன் தலையாய நோக்கம் தேசிய இனங்களை அடக்குவதே என்றும் தீர்ப்புரைத்தார்கள்.

பட்டி மன்றத்தில் பங்கேற்ற அனைவரின் சொல்லாற்றலையும், நடுவர் பாவலரேறு அவர்கள் வியந்து பாராட்டி அவர்களைப் பெரிதும் போற்றினார்கள்.

விழா நிறைவில் கரூர்த் தமிழ்ச்சங்கத்தின் பொளாளர் திரு. மேலை. பழனியப்பன் அவர்கள் அனைவருக்கும் நன்றி நவில விழா இனிதே நிறைவு பெற்றது.

பின்னர், அரசி தங்கும் விடுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

ஆண்டுதோறும் இத்தகைய அரியதும் அருமை வாய்ந்ததுமான இலக்கியப் பொழிவினைக் கேட்கும் ஆர்வம் கரூர் நகர மக்களின் உள்ளங்களிலிருந்து வெளிப்பட்டது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

-செய்தி: கடலூர் மணிமாறன் க,மு.
கருவூர் வட்ட உ. த. மு. க. செயலாளர்.

எந்த நாடானாலும் எந்தக் கொள்கையானாலும் தன் ஆட்சிக் கொள்கையை அங்குள்ள சிறுபான்மை இனங்களின் மீது கொண்டு செலுத்தத்தான் விரும்புகிறது என்பதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு!

உருசியாவில் முசுலிம்கள்!

''உருசியாவில் வளர்ந்து வரும் முசும்லிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தாவிட்டால் இருப்தாம் நூற்றாண்டின் இறுதிக்குள் அவர்களின் எண்ணிக்கை பத்து கோடியாக உயர்ந்துவிடும்!'

இப்படி எழுதியிருக்கிறது உருசிய அரசின் அதிகார முழுமை ஏடான 'பிராவ்தா!' முசுலிம்களின் எண்ணிக்கை அதிகமாகி வருவதைப் பற்றிக் கவலைப்பட்டு அது பல 'கண்ணீர்க் கட்டுரைகளை' வெளியிட்டுள்ளது. அவற்றின் சாரம் இதுவே.

1. முசுலிம்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகமாகி வருகிறது.

2. முசுலிம்கள் தங்கள் மனைவிமார்கள் மீது அதிக அன்பும் கவனமும் செலுத்தி வருகின்றனர்.

3. முன்பு முசுலிம் இளைஞர்கள் இசுலாமிய நெறியில் இருந்து விலகிச் சென்று வாழ்ந்தனர். இப்பொழுது மீண்டும் இசுலாத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த மூன்று செய்திகள் குறித்துக் கவனம் செலுத்தாவிடில் உருசியாவின் எதிர்காலம் கேடாகிவிடும் என்றும் பிராவ்தா எச்சரித்துள்ளது. அது மேலும் எழுதுகிறது:

''உருசியப் படைத்துறையில் 25 விழுக்காடு முசுலிம்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கையையும் படிப்படியாகக் குறைக்க வேண்டும், இந்த 25 விழுக்காட்டினர் படைத்துறையின் மற்ற பிரிவினரையும் போராடத் தூண்டுவார்கள்.

முசுலிம் இளைஞன் ஒவ்வொருவனையும் இறை மறுப்பாளனுக்க அரசு எல்லா வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். முசுலிம்கள் அதிகம் வாழும் பகுதிகளில் பொதுவுடைமைக் கட்சியை இன்னும் புத்தெழுச்சியுடன் அமைக்க வேண்டும். இசுலாமியப் பற்றுக் கொண்ட முசுலிம் முதியோர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும்.''

ஆப்கனிலிருந்து மாசுகோ திரும்பும் உருசியப் படையில் உள்ள முசுலிம் வீரர்கள் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பப்படுவதே இல்லையாம்! ஆப்கன் விடுதலைப் போராளிகளாலும் இமாம் சாமிலின் உணர்ச்சியூட்டும் பொன் மொழிகளாலும் ஈர்க்கப் பட்டே முசுலிம்' வீரர்கள் திரும்பி வருவதாக உருசிய அரசு அஞ்சுகிறது.

உலகின் பிற நாடுகளில் இசுலாமிய உணர்வுகள் மங்கி மறைந்து வருகின்றன எனும் முறையில் உருசிய அரசு நடத்திவரும் கருத்துப் பரப்புதலை அங்கு வாழும் முசுலிம்கள் ' 'அடிப்படையற்றது. என்கின்றனர். ஆப்கன் போரில் நேரடியாகப் பங்கு கொண்டு உருசியா திரும்பும் முசுலிம் வீரர்கள் இசுலாம் உயிர்த்துடிப்போடு விளங்குவதைப் பிற முசுலிம்களுக்கு எடுத்துரைப்பதாக பிராவ்தா கூறுகிறது.

அதுமட்டுமன்று, தாசுகண்ட பல்கலைக்கழகத்தில் பயிலும் முசுலிம் மாணவிகளும், அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் பணியாற்றிய முசுலிம் பெண்களும் இசுலாமிய முறைப்படி உடையணிந்து வருகின்றனர்;

'பிராவ்தா' கட்டுரையாளர் கூறுகிறார் :

''உருசிய முசுலிம்கள் இவ்வாறு இசுலாமிய நெறிகளைப் பின்பற்றத் தொடங்கினால் இங்கும் ஓர் ஆப்கன் தோன்றுவதைத் தடுக்கவே முடியது!''

—நன்றி : 'சமரசம்' செப் - 16-30

தமிழினம் அடிமை மீள வேண்டும்!

பாவலரேறு பங்கேற்ற நிகழ்ச்சிகள்... (தொடர்ச்சி)

3. நற்றமிழ்ப் பேரவை, திருச்சி - 14

கடந்த திருவள்ளுவராண்டு கன்னி 20 (6-10-86) திங்கள் மாலை 7 00 மணி அளவில் திருவெறும்பூர் ஊரக மன்றத்தில் தமிழின மேம்பாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. தமிழின விடுதலைப் பாடல்களை திரு. குழந்தை. ஈகவரசன் சலங்கைப் பறையுடன் பாடி அவையினை எழுச்சியுறச் செய்தார். நற்றமிழ்ப் பாவலர் நாவை. சிவம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க திரு.ஈகவரசன் வரவேற்புரையாற்றினார். உ.த. மு. க. துணைப்பொதுச் செயலாளர் திரு. தென்னவன்கோ, பாவலர் செல்லத்துரை முதலியோர் உரையாற்றினர். சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளி (பதிப்பாசிரியர் தூயதமிழகரமுதலி-தமிழ்ப் பல்கலைக்கழகம்-தஞ்சாவூர்) அவர்கள் தமிழினம் எவ்வகையிலெல்லாம் தாழ்ந்து கிடக்கிறது என்னும் நிலையினைச் சுட்டிக் காட்டி அதனை எழுச்சியுறச் செய்யும் இனமானக் கருத்துகளையும் - உலகின் முதற் செம்மொழியான 'தமிழ்' உலக மொழிகளுக்கெல்லாம் எங்ஙனம் மூலமாக விளங்குகின்றதெனவும் தெளிந்த ஆய்வுரை மூலம் விளக்கி எழுச்சியுரையாற்றினார். சிறப்புச் சொற்பொழிவாக கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ் மொழி, இன, நாட்டு முன்னேற்றக் கருத்துகளை திருக்குறள் மூலம் எடுத்துக்காட்டி விளக்கி அனைவரும் தமிழுணர்வு பெறும்படி வீறுரையாற்றினார். இறுதியாகத் தமிழின ஒன்றிணைப்புப் பாடலுடன் இரவு 11.30 அளவில் கூட்டம் இனிதே முடிந்தது.

செய்தி: குழந்தை. ஈகவரசன்.

4. முல்லை அச்சகம் -திறப்பு விழா! -திருமுல்லை வாயில்

துலைத் திங்கள் 5 (22-10-86) ஆம்பக்கல்; திருமுல்லை வாயில், முதன்மைச் சாலையில் அமைந்துள்ள பாவலர் முல்லைவாணன்- முல்லைச் செல்வியரின் முல்லை அச்சகம் திறப்பு விழா இனிதே நிகழ்வுற்றது.

முதியோர் இளைஞர் நற்பணிமன்றத் தலைவர் திரு. கிருட்டிணமூர்த்தி முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

திருவாளன்மார் குடந்தை. கதிர். தமிழ்வாணன், திருச்சி. குழந்தை. ஈகவரசன், சீர்காழிப் பாவலர் கோடிலிங்கம், திருமுல்லை வாயில் ஊராட்சி மன்றத் தலைவர் எசு.எ. இலத்தீப், புலவர் மிருத்யுஞ்செயன், அருள். இராமநாதன், நசீர் அகமது, மற்றும் வழக்கறிஞர் தாமோதரன், முத்துக்கிருட்டிணன், சி. கலியபெருமாள், இராசகுண்டு முதலிய தென்மொழிப் படைஞரும் தமிழ் ஆர்வலர்களும் நல்வாழ்த்துரை வழங்கினர்.

திரு. ந. செயப்பிரகாசன் வரவேற்புரையாற்றி மாலையணிவிப்புச் செய்ய, திரு. ஈகவரசன் (ஆசிரியர் தியாகராசன்) அறிமுக உரையாற்றினார்.

திரு. இசுடாலின், வழக்குரைஞர் எசு. நேதாசி, அழ. இளமுருகன், ஆ. மணவாளன் (அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்) போன்ற தென்மொழி மறவர்களும் கலந்து கொண்ட இவ்விழாவை வாழ்த்திப் பலரும் தொலைவரியும் மடல்களும் விடுத்திருந்தனர். பாவலர் முல்லைவாணன் நன்றியுரைக்குப் பின் விருந்தோம்பலுடன் விழா இனிது நிறைவெய்தியது.

மறுப்பு மடல்கள் [2-ஆம் பக்கத் தொடர்ச்சி]

உங்களுக்கு வேண்டுமானால் மேல்சாதி வெறி இருக்கலாம். எங்களுக்கு எல்லாம் ஒன்றுதான். எப்படி என்றால் ம. க. இ. க. சாதிவெறியர்கள் வெள்ளைச்சலவை சட்டையுடன் ஏழை- எளிய மக்களிடம் சென்று நடக்காத 'வர்க்கப்' போராட்டம் பற்றி பேசுகின்றார்கள். ஆனால் நாங்கள் நடக்கின்ற- நடக்க இருக்கின்ற (வேறு வழியில்லாமல் இப்போது நீ பேசும வெங்காய தன்னுறுதி(சுயநிர்ணய)உரிமை- இந்தித் திணிப்பு போலின்றி) இன மீட்சிப் போராட்டக்களத்தில் இறங்கியுள்ளோம்! ஆயினும் எங்களுக்கு எந்தமிழராலேதான் துன்பம் வரும் என்பது தெரியும என்பதைப் பாவலரேறு விளக்குகிறார், பாருங்கள்:

'எந்தமிழ்க்குப் பிறராலே வருந்தீங்கும் இடர்ப்பாடும் எள்ளுக்கென்றால், செந்தமிழர் எனக் கூறிச் செருக்கிடுவார் செயுந் தீங்கு பறங்கிக் காயாம்!'

திருக்குறளையும் - திருவள்ளுவரையும் முழுமையாய் அறியாதவர்கள் ஆய்வுக்கண்ணோட்டத்தைப் பற்றியா பேசுவது? இலை மறை காய் போல் சொல வகமாக 2300 ஆண்டுகளுக்கு முன்பே பல கருத்துகள் எழுதி இருந்ததால் குறள் பிழைத்தது; அவரும் பிழைத்தார்.

பறையை நாங்களும்தாம் முழக்குகிறோம். நீங்களும் முழக்குங்கள்! ஆனால், உங்களை முறைப்படி கரவற்ற நெஞ்சமுள்ள இந்நாட்டின் ஏழை எளிய மக்கள் உணரும் நாள் தொலைவில் இல்லை.

எங்களிடம் போலியுமில்லை - பொய்யுமில்லை! - எனவே பிழைப்புக்கு வழி தேவையுமில்லை! காசும் இல்லை! கண்டபடி எழுதுவது மில்லை!

அந்தோ! தமிழகமே! இப்படிக் குள்ளநரி போல் இவ்வினத்தில் ஊடுருவி செந்நாய் போல் வெவ்வாயில் எங்களினத்தைக் கவ்விச் செல்லும் யவரும், இங்குதாமே உள்ளனர்! அவர்களை இனங்காட்டு! நெடிய நடை நாட்டு! வெற்றி - விடுதலை - இத்தமிழக மக்களுக்கே!

-இளந்தமிழன். -திருச்சி.

("புதிய கலாச்சாரத்"திற்கு விடுத்த வேறொரு மடலின்படி)

அன்புடையீர், தங்கள் அக்டோபர்-86. இதழில் சாதி வெறி என்ற தலைப்பில் "வள்ளுவனார் முதல் பெருஞ்சித்திரனார் வரை" என்ற கட்டுரை திரு. சி. இராசன் என்பவரால் எழுதப்பட்டிருந்தது.

திரு. மலையமான் அவர்கள் தென்மொழியில் வெளியிட்ட "பறையும் - கயவரும்" என்ற கட்டுரைக்கு மறுப்பாக வெளியிட்டு இருந்தீர்கள். வெளிப்பாடு பொதுவாக ஓர் அறிவு என்ற அளவிலே தென்மொழி "பறையும-கயவரும்', என்ற கட்டுரை வெளியிடப் பெற்றிருந்தது. தென்மொழியில் வெளியாகும் எவற்றையும் நீங்கள் திறனாய்வு செய்யலாம. அதைத் தமிழாக்கித் தென்மொழி வெளியிடும்.

இன்று உலகின் பல பகுதிகளிலும் தமிழ் இனமும், மொழியும் தமிழர் வாழும் இடங்களும் தாக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும், சீரழிக்கப்பட்டும் வருவதை உணர்ந்து, தமிழ் மொழி, இனம், நாடு காக்கப் பெற வேண்டும். உரிமைபெற வேண்டும் என்ற கடுஞ் சுமையை மேற்போட்டுக் கொண்டு 1959- முதல் தட்டுத் தடுமாறியும் இன்று ஓரளவு நிலைப்படுத்தப் பட்டும், நம் இனத்திலேயே பிறந்த எட்டப்பர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டும் இன்று தமிழின பகைவர்கள் இத் "தென்மொழி இயக்கத்தை" எச்சரிக்கையோடு கண்காணித்து வரும் நிலையில் தென்மொழி நடைபெற்று வருகிறது.

இந்தத் தமிழினத்துக்குக் கிடைத்த வழிகாட்டிகளிலேயே, தந்தை பெரியாருக்குப்பின், நாவும், நெஞ்சும் ஒன்றி நடக்கும், நல்லறிஞர் பெருஞ்சித்திரனார்.

அவரோடு 20 ஆண்டுகளாகப் பழகியவன் என்ற முறையில் நான் தங்களுக்கு அவரைப் பற்றிய அல்லது இயக்கத்தைப் பற்றிய செய்திகளை விரிவாகத் தெரிவிக்க இயலும். உள்ளத்தாலும் சாதி உணர்ச்சி இல்லாதவர். அவர் கலப்புத் திருமணம் செய்து கொண்டார் என்பதைத் தவிர அவரோ, அவரின் துணைவியாரோ என்ன சாதி என்று இன்று வரை எனக்குக் கூடத் தெரியாது. அவருடைய மக்கள் அனைவரும்(திருமணம் ஆகாதவர்களைத் தவிர) சாதி உணர்ச்சி கருதாத தென்மொழி அன்பர்களையே திருமணம் செய்துள்ளனர். அவருடைய குடும்பத்தைப் போன்று ஓர் வழிகாட்டிக் குடுப்பத்தைப் பாரத்தல் அரிது; அவருக்கு அரசியல் வலை காமராசர் காலத்தில் இருந்தே வீசப்பட்டதுதான். பிழைப்பை மட்டுமே கருதியிருப்பவர்களால் "தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்" ஆகிய இதழ்களில் ஒன்றைக்கூட வெளியிட முடியாது.

தமிழ்மொழியை இருண்ட காலத்தில் இருந்து இன்று விடியல் காலத்திற்குக் கொண்டு வந்த பெருமையில் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு.

உங்களுடைய வெளிநாட்டுக் கண்ணாடியின் வழியாக நீங்கள் பார்வையிட்டு, அவரை நீங்கள் சாதி வெறியனாகவும், பிழைப்புவாதியாகவும் வெளிப்படுத்தலாம். இனவாதி என்று குறிப்பிடுவது என்ன பொருளிலோ? விளங்கவில்லை

ஆனால் ஒன்று! அவரை அல்லது அவரின் இயக்கத்தை நீங்கள் எந்த அளவிற்குத் தாக்குகின்றீர்களோ அந்த அளவிற்கு உங்களுக்கும், உங்கள் இயக்கத்திற்கும். வெளியாரும் தமிழ்ப்பகைவர்களும் உதவக் காத்திருக்கின்றனர். அதன் மூலம் தங்கள் பிழைப்பையும், தாங்கள் வளப்படுத்திக் கொள்ளலாம்.

ஏழை எளிய தமிழரின்பால் அவர்கள் ஏமாற்றப்படும் தன்மையினைத் தாங்கள் ஓரளவு உண்மையாக வெளியிட்டு வருகிறீர்கள் என்ற நம்பிக்கை இருந்தது. இன்று ஓர் உண்மையாளனைப் பொய்யனாகத் தாங்கள் காட்டியதில் இருந்து ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கேற்ப தங்கள் வெளியீடுகளில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது என்று ஆராய வேண்டியுள்ளது.

இருப்பினும் உண்மைகள் வெளியாக்கப் பட வேண்டும் என்ற அக்கறையும், துணிச்சலும் இருக்குமானால் வள்ளுவரைப் பற்றியும், பெருஞ்சித்திரனாரைப் பற்றியும் தாங்கள் பெருஞ்சித்திரனாரிடம் நேருரை பெற்று வெளியிடுவது தங்களுடைய நல்ல நோக்கத்தைப் புலப்படுத்தும்.

"புதிய கலாச்சாரம் என்ற சொல்லானது.

• (1) புதிய + கலா + ஆச்சாரம் என்ற மூன்று சொற்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் அல்லது,

Culture - என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவமாக இருக்க வேண்டும்.

இதைத் தமிழில் சொல்ல வேண்டுமாயின் (1) புதிய கலையொழுக்கம் அல்லது புதிய பண்பாடு என்பதாக இருக்க வேண்டும்.

இறுதியாக, பார்ப்பனியத்தை எதிர்த்துப் போராடும் தாங்கள், இன்று பார்ப்பனர்கள் கூடத் தமிழை வெறுக்காமல் நல்ல தமிழில் பல கட்டுரைகள்" வெளிப்படுத்தும் போது. புதிய பண்பாடு நடைமுறை என்றெல்லாம் கூறிக் கொண்டு செத்து விட்ட மணிப்பவள நடைக்கு உயிரூட்டிப் பார்ப்பனியத்தை வளர்த்து, தமிழினம் மேலும் சிதைவுறாமல் செய்ய ஒத்துழைக்க வேண்டும். அதற்குத் தக்க தாங்கள் விரும்பும் தமிழறிஞர்களைக் கண்டு காட்ட நாங்கள் அணியமாக இருக்கிறோம். தமிழில் இதழ் நடத்துவோர் இதழுக்குத் தேவையான குறைந்த அளவு தமிழறிவுடனேனும் இருத்தல் தேவை என்ற அளவில் இந்த மடலை எழுத வாய்ப்பளித்த தங்களுக்கும் மறுப்புக் கட்டுரை அளித்த திரு. சி. இராசன் அவர்களுக்கும் நன்றி கூறி முடிக்கின்றேன். தென்மொழி நா.இளமாறன்

நினைவிருக்கட்டும்!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

கூட்டும்

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு!

சென்னை, பெரியார் திடலில்

வரும் திசம்பர் 27, 28, காரி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.

அனைவரும் தவறாது கலந்து கொள்க!

தங்கள் கருத்துகளை எடுத்துச் சொல்க!

உ. த. மு. க. வின் உயர்ந்த கொள்கைகள் :

- தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
- சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
- இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
- மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
- பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்கள் :
தென்மொழி ந. முத்துக்குமரன். பல்லடம்-மா. ஆறுமுகம்.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 75 TN. MS. (C) 657

அனுப்புதல் :
தமிழ்நிலம்
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

தொலைபேசி எண் : 847829.

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. ! திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர் : தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.